**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**முன்னிலை செல்வி.A. யுகாதிமரியா, B.Com.L.L.B(Hons.,)**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை.**

**2025ம் ஆண்டு நவம்பர் திங்கள் 06ம் நாள் வியாழக்கிழமை**

**<u>அசல் வழக்கு எண்.48/2013</u>**

**<u>இ.ம.எண்.03/2025</u>**

1) வன்னிமுத்து

2) சுசீலா

3) பெரியசாமி **..மனுதாரர்கள்/பிரதிவாதிகள்**

**/எதிர்/**

1) தங்கமணி

2)ரோகிணி

3) குருமூர்த்தி

4) பிச்சையம்மாள் **...எதிர்மனுதாரர்கள்/வாதிகள்**

இம்மனு எனது முன்னிலையில் இன்று 03.11.2025ம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. V.R.பாலசுப்ரமணியன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. K.S.M. சாகுல் ஹமீது அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பில் எடுத்துரைத்த வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்:

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 8, விதி 1A(3)ன் கீழ் மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் மனுவில் கண்டுள்ள கூடுதல் ஆவணங்களை மேற்படி வழக்கின் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்ய வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>மனுதாரர் மனுவின் சுருக்கம்:</u>**

2) 1ம் மனுதாரர் மேற்படி அசல் வழக்கின் 1ம் பிரதிவாதியாவார். 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் மனைவியாவார். 3ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் மகன் ஆவார். மேற்படி வழக்கு, பிரதிவாதிகள் தரப்பு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. மனுவில் கண்ட ஆதரவுகள் இந்த வழக்கிற்கு மிகவும் முக்கியமானவை. மனுவில் கண்ட ஆவணங்களை உரிய காலத்தில் தாக்கல் செய்ய இயலாமல் போய்விட்டது. மேற்படி ஆவணங்களை வேண்டுமென்றே உரிய காலத்தில் தாக்கல் செய்யாமல் இருக்கவில்லை. மனுவில் கண்ட ஆவணங்களை உரிய காலத்தில் தாக்கல் செய்யாததை மன்னித்து, தற்போது தாக்கல் செய்யப்பட்டதை ஏற்றுக்கொள்ளவேண்டும். இல்லாவிட்டால், மனுதாரர்களுக்கு ஏராளமான கஷ்டமும், நஷ்டமும் ஏற்படும். எனவே, இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்மனுவுரை ஆட்சேபனையின் சுருக்கம்:</u>**

3) மனுதாரர்களின் மனு சட்டப்படி செல்லாதது. நிலைநிற்கத்தக்கதல்ல. மனுதாரர்களுக்கு மனுவில் கண்ட பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல. இந்த எதிர்மனுதாரர்கள் நேரடியாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்றவை இம்மனுதாரர்களே நிரூபிக்க கடமைப்பட்டவர்கள் ஆவார்கள். மனுவில் குறிப்பிட்ட ஆவணங்கள் அனைத்தும் இவ்வழக்கிற்கு சம்மந்தம் இல்லாத ஆவணங்கள் ஆகும். மேற்படி வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யும் காலத்திலே ஆவணங்களை தாக்கல் செய்யாமல், வழக்கை காலம் தாழ்த்த வேண்டுமென்ற ஒரு கெட்ட எண்ணத்திலே, இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுவில் சட்டப்படி எவ்வித உரிய காரணமும் குறிப்பிடாமல் தற்சமயம்தான் ஆவணம் கிடைத்ததாக கூறி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனு எவ்விதத்தில் சட்டப்படியும், நியாயப்படியும் தர்மம் ஆகும். உண்மையில்,

இம்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மேற்படி வழக்கில் எவ்வித கட்சியுமின்றி வழக்கை காலம் கடத்த வேண்டுமென்ற கெட்ட எண்ணத்திலே செயல்பட்டு வருகிறார்கள். சரியான காரணமின்றி தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவானது எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யவேண்டும். இம்மனுவிற்கு எவ்வித முகாந்திரமும், காரணமும் இல்லை. எனவே, இம்மனுவை எதிர்மனுதாரர்களின் அதிகப்படியான செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

**<u>தீர்மானிக்கப்பட வேண்டிய கேள்வி:</u>**

**4)** மனுதாரரின் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா?

**<u>சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>**

**5)** இரு தரப்பிலும் வாய்மொழி சாட்சியம் இல்லை. ஆவண சாட்சியங்களும் தாக்கல் செய்யப்படவில்லை.

**<u>தீர்வு:</u>**

**6)** இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன. வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்கையில், மேற்படி வழக்கானது எதிர்மனுதாரர்கள்/வாதிகளால் மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்தைப் பொறுத்து நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரிகிறது. மேலும், மேற்படி வழக்கில் வாதிகள் தரப்பில் வா.சா.3 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, வாதிகள் தரப்பில் சாட்சியம் முடித்து வைக்கப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பில் 1ம் பிரதிவாதி பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ள நிலையில், இம்மனுவானது பிரதிவாதிகள்/மனுதாரர்களால் மேற்படி வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் மனுவில் கண்ட கூடுதல் ஆவணங்களை தாக்கல் செய்ய வேண்டி அனுமதி கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) மேற்படி வழக்கில் பிரதிவாதிகள்/மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை பரிசீலனை செய்ததில், தாவா சொத்தைப் பொறுத்த வாதிகளின் அனுபவமானது, மனுதாரர்களால் முற்றிலுமாக மறுக்கப்பட்டுள்ளது என்பது தெரிகிறது. மேலும் இவ்வழக்கானது, கடந்த 2013ம் வருடமே எதிர்மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு இருக்கையில், மனுவில் கண்ட ஆவணங்களாகிய 1ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்டுள்ள வருவாய் துறை ஆவணங்கள், 3ம் பிரதிவாதி பெயரில் உள்ள செட்டில்மென்ட் ஆவணம் மற்றும் 3ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்டுள்ள இதர வருவாய் துறை ஆவணங்கள் ஆகியவற்றை பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யவேண்டி அனுமதி கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8) மனுதாரர்கள் தரப்பில் மனுவில் கண்ட ஆவணங்களை உரிய காலத்தில் தாக்கல் செய்யாமல் போய்விட்டது என்றும், வேண்டுமென்றே உரிய காலத்தில் தாக்கல் செய்யாமல் இல்லை என்றும், எனவே மனுதாரர்கள் தரப்பில் ஏற்பட்ட கால தாமதத்தை மன்னித்து, இம்மனுவை அனுமதிக்க வேண்டியும் மனுதாரர்கள் தரப்பில் வாதிடப்பட்டது. மாறாக, எதிர்மனுதாரர்கள் தரப்பில், இம்மனுவானது காலம் கடத்த வேண்டி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகவும், மேலும் மேற்படி வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்த காலத்திலேயே ஆவணங்களை தாக்கல் செய்யாமல் கெட்ட எண்ணத்தில் வழக்கை காலத்தாமதப்படுத்த வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகவும், இம்மனுவில் கண்ட ஆவணங்களுக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்று கூறி ஆட்சேபனை செய்யப்பட்டது.

9) இரு தரப்பு வாதங்கள் மற்றும் வழக்குரைகளை பரிசீலனை செய்ததில், மனுதாரர்கள் தரப்பில் மேற்படி ஆவணங்களை எதிர்வழக்குரை தாக்கல் செய்த காலத்தில் தாக்கல் செய்யாமல், தற்போது அதிகப்படியான காலதாமதத்துடன் தாக்கல் செய்யப்பட்டதற்கான சரியான காரணங்கள் எதுவும் மனுவில் கூறப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. மனுவில் கண்ட

ஆவணங்கள் தற்போது வரை ஏன் மனுதாரர்கள்வசம் கிடைக்கப்பெறவில்லை என்றோ, அல்லது மேற்படி காலதாமதம் ஏற்பட்டதற்கான காரணம் என்ன என்றோ, உரிய விளக்கங்கள் எதுவும் கூறப்படாமல் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனினும், மேற்படி கோளாறுகளால் மேற்படி வழக்கில் இரு தரப்பினர்களுக்கும் இந்நீதிமன்றத்தால் வழங்கப்படும் நீதி பரிபாலனமானது, இம்மனுவை அனுமதிக்காவிட்டால் தடைபட்டுவிடும் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேற்படி வழக்கில், இரு தரப்பினர்களுக்கும் உரிய வாய்ப்பு அளித்தபின்பு, முழு விசாரணைக்கு பின்னிட்டே இந்நீதிமன்றத்தால் தகுந்த நீதி வழங்கப்படமுடியும் என்பதாலும், மனுவில் கண்ட ஆவணங்கள் மேற்படி வழக்கில் எழுந்துள்ள எழுவினாக்களைப் பொறுத்து தீர்மானம் செய்ய அவசியமானவை என்றும் இந்நீதிமன்றம் கருதுகின்றது. அதுமட்டுமல்லாமல், இம்மனுவை அனுமதிக்கும் பட்சத்தில், மனுவில் கண்ட ஆவணங்களைப் பொறுத்து ஆட்சேபனை செய்யவும், சாட்சியிடம் குறுக்கு விசாரணை செய்யவும் எதிர்மனுதாரர்களுக்கு எல்லா வாய்ப்புகளும் வழக்கு விசாரணையின் போது வழங்கப்படும் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. இருப்பினும், அதிகப்படியான காலதாமதத்தினாலும், உரிய விளக்கங்கள் மற்றும் காரணங்கள் கூறப்படாமல் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவால், எதிர்மனுதாரர்களுக்கு அதிக சிரமம் ஏற்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே, அதனை ஈடுகட்டும் பொருட்டு, இம்மனுவை செலவுத்தொகையுடன் அனுமதி செய்ய இந்நீதிமன்றம் முடிவு செய்துள்ளது.

<u>முடிவு:</u>

முடிவாக, மேற்சொன்ன காரணங்களுக்காக இம்மனுவானது செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. இம்மனுவின் செலவுத்தொகையாக ரூ.1,000/-யை மனுதாரர்கள் வருகின்ற 12.11.2025 அன்றோ அல்லது அதற்குள்ளோ, எதிர்மனுதாரர்களுக்கு செலுத்துமாறு உத்தரவிடப்படுகிறது. தவறும்பட்சத்தில், இந்த உத்தரவானது தானாகவே தள்ளுபடியாகிவிடும் என்று இதன்மூலம் உத்தரவிடப்படுகின்றது.

இந்த உத்தரவானது, என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பு எடுக்கப்பட்டு, பின்பு கணிணியில் அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 06ம் தேதியாகிய இன்று அவையறிய பகிரப்பட்டது.

YUGHATHY MARIYA

Digitally signed by YUGHATHY MARIYA
Date: 2025.11.06 15:27:06 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**

**குளித்தலை**

மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

YUGHATHY MARIYA

Digitally signed by YUGHATHY MARIYA
Date: 2025.11.06 15:27:12 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**

**குளித்தலை**